வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P .1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 16.07.2026 வியாழக்கிழமை இதழ் : 191 பக்கங்கள் : 08




## நெடுந்தீவு, அனலைதீவு நயினாதீவை பசுமை வலுசக்தி தீவுகளாக மாற்றுக!

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்



கொழும்பு, ஜூலை.16

நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளில் தற்போது செயல்பாட்டிலுள்ள கலப்பு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டமைப்பு (Hybrid Renewable Energy System – HRES) திட்டத்தின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அத்தீவுகளை பசுமை வலுசக்தி தீவுகளாக அபிவிருத்தி செய்யவும், மேம்படுத்தவும் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

வலுசக்தி அமைச்சு தொடர்பில், 2026 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு முந்தைய கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வலுசக்தி அமைச்சினால் 2026 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம், இந்த ஆண்டில் நிறைவு செய்யக்கூடிய திட்டங்கள் மற்றும் அடுத்த ஆண்டுக்கான நிதித் தேவைகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. 07

## இரண்டு சிசுக்களின் என்புகூடுகள் நேற்று செம்மணியில் அடையாளம்



யாழ்ப்பாணம், ஜூலை. 16

செம்மணி மனித புதைகுழியின் 3ஆம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகின.

நேற்று புதிதாக 2 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அவை இரண்டும் சிசுக்களுடையவை.

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாள்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 32 நாள்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. கடந்த 23ஆம் திகதியுடன் அகழ்வுப் பணிகள் 07

## சாமர சம்பத்துக்கு எதிராக பேராயர் சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை. 16

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சமர சம்பத் தசநாயக்க வெளியிட்ட பொய்யான தகவல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பேராயரின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ நேற்று அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சமர சம்பத் தசநாயக்க, தற்போதைய இராணுவத் தளபதி தனது பதவிக் காலத்தை நீடித்துக் கொள்வதற்காக, கடந்த 07

## செம்மணி குறித்து உண்மையை கண்டறிய அரசு முழு ஒத்துழைப்பு

### நீதியமைச்சர் ஹர்ஷன உறுதி



கொழும்பு, ஜூலை. 16

செம்மணி விவகாரத்தில் உண்மையைக் கண்டறிவதற்குக் அரசாங்கத் தரப்பில் அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என்றும் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: 07

## வீரவன்ஸவின் சகோதரருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூலை. 16

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் சகோதரர் சரத் வீரவன்ஸ, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்ட நிலையில் ஜூலை 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் பேரில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாணந்துறை பகுதியில் உள்ள தனக்குச் சொந்தமான ஓர் வீட்டில் அவர் இருப்பதாகக் கிடைத்த தகவலின் 03

## பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் 'அரோகரா' கோஷத்துடன் கதிர்காமத்தில் நேற்றுக் கொடி!



அம்பாறை, ஜூலை. 16

இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்மீக பூமியாகவும், மத நல்லிணக்கத்தின் திருத்தலமாகவும் விளங்கும் கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா, நேற்று மாலை 6.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம் பமானது.

கொடிக்கு விசேட 07

## தமிழ் கட்சிகள் இணைவு புரோக்கர்களின் கூட்டு!

### சாடுகிறார் இளங்குமரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை. 16

அரசியல் கூட்டு எனக் கூடுகின்ற கூட்டங்கள் எல்லாமே ஒரு புரோக்கர் கூட்டங்கள் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி கல்வயல் பாலத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 07

## திடீரென பதவி விலகினார் மத்திய மாகாண ஆளுநர்!

கொழும்பு, ஜூலை. 16

மத்திய மாகாண ஆளுநர் சரத் அபயக்கோன், தனது பதவியிலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன் தினம் அனுப்பப்பட்ட அந்த பதவி விலகல் கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றும், ஜனாதிபதி அந்த கடிதத்தை ஏற்றுக் கொள்வாரா அல்லது நிராகரிப்பாரா என்பது 03

## குமார ஜயக்கொடிக்கு எதிரான வழக்கு செப்ரெம்பர் 7ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை. 16

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான முன்னாள் அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான வழக்கின் மேலதிக சாட்சி விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சிகள் இருவரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, மேலதிக சாட்சி விசாரணையை செப்ரெம்பர் 07 ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிபதி உத்தரவிட்டார். 03

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திண்மக்கழிவு மீள்சுழற்சி மையத்தால் கடும் பாதிப்பு

## காக்கைதீவு மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை. 16

யாழ்ப்பாணம் - காக்கைதீவு திண்மக்கழிவு மீள்சுழற்சி மையத்தின் செயற்பாடுகளால் சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் தீவிரமடைந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டிய அப்பகுதி மக்கள், நிரந்தரத் தீர்வு கோரி நேற்று யாழ்ப்பாண மாநகர சபை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜே-88, ஜே-85 மற்றும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட ஆறுகால்மடம் பழம் வீதி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாண மாநகர சபையினால் திண்மக்கழிவுகளைத் தரம் பிரித்து, மீள்சுழற்சி செய்து சேதனப் பசளையாக மாற்றும் நோக்கில் காக்கைதீவு மீள்சுழற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

எனினும், மீள்சுழற்சிக்காகக் கொண்டுவரப்படும் கழிவுகள் பல நாட்களாகக் குவிந்து கிடப்பதால் அவை அழுகி கடுமையான துர்நாற்றம் வீசுவதுடன், கழிவுநீர் வடிந்து சுற்றுப்புறச் சூழலையும் குடியிருப்புகளையும் பாதிப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக ஈக்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன், வயிற்றோட்டம், வாந்திபேதி, சொறி, சிரங்கு உள்ளிட்ட பல்வேறு நோய்கள் பரவி வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.




மேலும், கழிவுகள் முறையாகத் தரம்பிரிக்கப்படாததுடன், திறந்தவெளியில் எரிக்கப்படுவதால் பரவும் புகை காரணமாக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை சுவாசக் கோளாறுகள் மற்றும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

முன்னர் இம்மையத்தில் தரமான கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டதோடு, கழிவுகளிலிருந்து சேதனப் பசளை தயாரித்து விற்பனை செய்யப்பட்டதாகவும், தற்போது அந்த நடைமுறைகள் முற்றாகக் கைவிடப்பட்டுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர்.

இந்த நிலைக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாக அலட்சியமே காரணம் எனத் தெரிவித்த மக்கள், மாநகர முதல்வரும் மாநகர ஆணையாளரும் நேரில் வந்து நிரந்தரத் தீர்வை அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நீதித்துறைச் சுயாதீனத்தில் தலையிடுகிறது அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 16

நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை ஆகியன ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான மூன்று தூண்களாக விளங்குவதோடு, நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் நீதித்துறை மிக முக்கிய வகிபாகத்தை ஆற்றி வருகின்றது. இதற்கு மேலதிகமாக சுயாதீன ஊடகங்களும் சிவில் சமூககமும் முக்கிய இரு தூண்களாகத் திகழ்ந்து வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் தெரிவித்தார்.

விசேட காணொளியொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறானதொரு பின்னணியில், தற்போதைய அரசாங்கம் நீதிமன்றத்திற்குப் பாரிய அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கும், உயர்நீதிமன்றங்களில் நிலவும் நீதியரசர்களின் வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கும் முற்பட்டு வருகின்றது. இதன் மூலம், கனம் நீதியரசர்களின் சுதந்திரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி, ஜனநாயகத்தை சீர்குலைக்க அரசாங்கம் எடுக்கும் இந்த முயற்சியை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உயர்நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய நீதியரசர்களை நியமிக்காது வெற்றிடமாக வைத்திருப்பதே நீதிமன்றத்தின் மீது ஏற்படுத்தப்படும் ஒருவகை அழுத்தமாகும். நீதியைப் பெற்றுக்கொடுக்கும் செயல்முறை, சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதியையும் நியாயத்தையும் பாதுகாக்கும் கொள்கைகளை உறுதிப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் முற்போக்கு எதிர்க்கட்சியும் தயார்.



ஜனநாயகத்திலும் நீதிமன்றத்திலும் கை வைக்காது, அதன் சுயாதீனத்தில் தலையீடுகளை மேற்கொள்ளாது, ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்ற வகையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கூடிய புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு முன்வாருங்கள். மக்கள் தமக்கு வழங்கிய ஆணையானது நீதிமன்றத்திற்கு அழுத்தம் கொடுக்காமல் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கே ஆகும். இந்த மக்கள் ஆணையை நிராகரிப்பது மக்களின் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் மீறும் செயலாகும்-என்றார். (அ)

# 5,575 மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் புதுக்குடியிருப்பில் கைது!

முல்லைத்தீவு, ஜூலை. 16

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த 5575 மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படையும், முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து நேற்று முன் தினம் மேற்கொண்ட விசேட கூட்டு நடவடிக்கையின் போது இந்த கைது இடம்பெற்றது. கிழக்கு கடற்படை கட்டளைக்குட்பட்ட கோட்டாபய கடற்படைத் தளத்திற்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5,575 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றை வைத்திருந்த சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் கைப்பற்றப்பட்ட மதுபானப் போத்தல்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவு மதுவரித் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகளின் ஆயுங்களை தேடி புதுக்குடியிருப்பில் விசேட அகழ்வுப் பணி

முல்லைத்தீவு, ஜூலை. 16

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் தனியார் காணி ஒன்றில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய புதையல் அல்லது ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் அனுமதியுடன் கொழும்பிலிருந்து வருகை தந்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் நேற்று முன் தினம் அகழ்வுப் பணியை ஆரம்பித்தனர்.

அகழ்வுப் பணி தொடர்பாக செய்தி சேகரிப்பிற்காகச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு, அகழ்வு நடைபெறும் பகுதிக்குள் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை எனவும், முதலாம் நாள் அகழ்வுப் பணியின்போது எவ்வித ஆயுதங்களோ, தங்கங்களோ அல்லது வேறு பொருட்களோ மீட்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கல்வித்துறையில் வறுமையும் போதைப்பொருளும் தாக்கம்!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை. 16

கல்வித் துறையில் வறுமையும் போதைப்பொருள் பாவனையும் தாக்கம் செலுத்தி வருவதாகவும், அவற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டக் கல்வி அபிவிருத்தி உபகுழுவின் முதலாவது கூட்டம், உபகுழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில், யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் கல்வித் துறையில் வறுமையும் போதைப்பொருள் பாவனையும் தாக்கம் செலுத்தி வருவதாகவும், அவற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டதுடன், யாழ் மாவட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் மற்றும் ஏனைய ஆளணி வெற்றிடங்களை அரசாங்கம் படிப்படியாக நிரப்பப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் உரையாற்றிய அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், திட்டமிடல், சுற்றுலா, உணவு பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் கல்வி ஆகிய துறைகளுக்காக உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உபகுழுத் தலைவர் ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன் கருத்து தெரிவிக்கையில், மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்கள் மற்றும் 5 கல்வி வலயங்களில் கல்வி தொடர்பான பிரச்னைகளை அடையாளம் கண்டு, மாவட்ட மட்டத்தில் தீர்க்கக்கூடியவற்றை உடனடியாகவும், ஏனையவற்றை மத்திய அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு செல்வதே இந்த உபகுழுவின் நோக்கம் என்றார்.

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை, குறைந்த மாணவர் எண்ணிக்கையுள்ள பாடசாலைகள், கல்வி சீர்திருத்தங்கள், ஆசிரியர் இடமாற்றங்கள் உள்ளிட்ட விடயங்களில் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முன்வைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள், நெடுந்தீவு ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள், குறைந்த மாணவர் எண்ணிக்கையுள்ள பாடசாலைகளை ஒருங்கிணைத்தல், தொழிற்கல்வி விழிப்புணர்வு, பாடரீதியான ஆசிரியர் தேவைகள் மற்றும் சமாந்தர வகுப்புகள் உள்ளிட்ட பல்வேறு கல்வி தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. (அ)

# காக்கைதீவு மீள் சுழற்சி மையத்தை பார்வையிட்ட யாழ்.மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை. 16

யாழ்ப்பாணம், காக்கைதீவு மீள் சுழற்சி மையத்தை யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் நேற்று நேரில் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் - காக்கைதீவு மீள்சுழற்சி மையத்தைச் சூழ்ந்து வாழும் மக்கள் மாநகர சபை முன்பாக நேற்றுக் காலை போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

போராட்டத்தில் மக்களின் கோரிக்கைகளை செவி சாய்த்த யாழ்ப்பாண மாணவர் சபை முதல்வர், உங்கள் கோரிக்கை நியாயமானது. அது தீர்க்கப்படவேண்டிய விடயம் எனவும் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து நேற்று மதியம் 12 மணியளவில் குறித்த குப்பம்மேட்டை பார்வையிட்ட மாநகர சபை முதல்வர், இதற்கான நிரந்தரத் தீர்வை பெற்று தருவதாகவும், மக்களுடைய கோரிக்கைகள் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.07.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆனி 32

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## நீதித்துறையில் அரசாங்கத்தின் தலையீடு பற்றிய விமர்சனங்கள்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் உயர்நீதிமன்றத்தினதும் ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்காக அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உத்தேசிப்பதாகக் கூறப்படும் விவகாரம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருக்கிறது.

மேல்நிலை நீதிமன்ற கட்டமைப்பின் சுதந்திரமும் அதன. மீதான மக்களின் நம்பிக்கையும் வலுவான ஜனநாயகத்துக்கு அவசியமானவை. தற்போதைய நீதிபதிகளின் பதவிக்காலத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் முற்படும்போது நீதித்துறையின் நிறுவன ரீதியான சுதந்திரம் குறித்து தவிர்க்க முடியாமல் விமர்சனங்களை கிளம்புகின்றன.

அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிரணி அரசியல் கட்சிகள் காட்டுகின்ற எதிர்ப்பு அரசியல் ரீதியானது. அதைப் புரிந்து கொள்ளமுடியும். ஆனால், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் கொழும்பு மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் போன்ற சட்டத்துறைசார் அமைப்புக்களின் விமர்சனங்கள் கருத்தூன்றிய கவனத்துக்கு உரியவையாகின்றன.

மேல்நிலை நீதிமன்றங்களின் தற்போதைய நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை இந்த சட்டத்துறைசார் அமைப்புக்கள் நீதித்துறையின் மீது செல்வாக்கு செலுத்தும் ஒரு முயற்சியாகவே பார்க்கின்றன.

அரசியலமைப்பின் பிரகாரம் நீதித்துறை உண்மையில் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, அது நிறைவேற்று அதிகாரத்தின் தலையீட்டிலிருந்து முற்றிலும் விடுபட்டதாக இருக்க வேண்டும் என்று இந்த அமைப்புக்கள் வாதிடுகின்றன.

அவ்வப்போது அரசியல் சூழலுக்கு அல்லது ஆளும் தரப்பின் தற்காலிக தேவைகளுக்கு ஏற்றமுறையில் அரசியலமைப்புக்கு திருத்தங்களைக் கொண்டுவந்த ஆரோக்கியமற்ற நீண்டதொரு வரலாற்றை இலங்கை கொண்டிருக்கிறது.

மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் பதவிக்காலத்தை இவ்வாறாக மாற்றுவது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்கி எதிர்கால அரசாங்கங்களும் தங்களுக்கு தேவையானவாறு நீதித்துறையின் கட்டமைப்பில் தலையிட வழிவகுக்கும் என்ற விமர்சனம் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

தேசிய மக்கள் சக்தி இரு வருடங்களுக்கு முன்னர் தேசிய தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியதன் பிரகாரம் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும்போது அந்த முழுமையான செயன்முறைகளின் ஒரு அங்கமாக நீதித்துறை தொடர்பிலான ஏற்பாடுகளைக் கொண்டுவருவதை விடுத்து ஏற்கெனவே 21 திருத்தங்களுக்கு உள்ளான தற்போதைய அரசியலமைப்புக்கு இன்னொரு தற்காலிக திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதாகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கான திட்டம் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்புகிறது.

அதனால், அரசாங்கம் தற்போதைய அதன் திட்டத்தைக் கைவிட்டு இந்த விவகாரம் குறித்து சட்டத்துறை சார் அமைப்புகளுடனும் அக்கறையுடைய சிவில் சமூக அமைப்புகளுடனும் பரந்தளவிலான கலந்தாலோசனைகளை நடத்தி சந்தேகங்களை அகற்றுவதுடன் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

# இன்னும் முடியவில்லை

**அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும. இடையேயான பேச்சுவார்த்தை முன்னேற வேண்டுமானால், இரு நாடுகளும் பரஸ்பர நம்பிக்கை குறைபாட்டை களைய வேண்டும்**

போர் நிறுத்தத்தை 60 நாட்களுக்கு நீடிக்கவும் ஈரானின் அணுசக்தி திட்டம் உள்ளிட்ட நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவும் உறுதியளித்த அமெரிக்க - ஈரான் புரிந்துணர்வு ஒப்பந்தம் சிதைந்து போவதற்கு வெறும் 20 நாட்களே சென்றன. செவ்வாய்க்கிழமை (7) இரவு, ஹார்முஸ் நீரிணையில் மூன்று எண்ணெய் கப்பல்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஈரானில் அமெரிக்கா கடுமையான வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

ஈரான், குவைத் மற்றும் பஹ்ரைனில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது, அதன் பிறகு போர் நிறுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக ஜனாதிபதி டிரம்ப் அறிவித்தார்.

அவர் மிகைப்படுத்திப் பேசக்கூடியவர் என்று அறியப்பட்டாலும், தற்போதைய நெருக்கடியானது ஜூன் 17 புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு அமைதி செயல்முறைக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய சவாலாகும்.

இந்த நெருக்கடி ஒரே இரவில் உருவானதல்ல. ஆரம்பத்திலிருந்தே, இந்த ஒப்பந்தத்தில் மூன்று முக்கிய முட்டுக்கட்டைகள் இருந்தன. லெபனானில் இஸ்ரேலின் போர் முடக்கப்பட்ட தனது நிதியை ஈரான் அணுகுவது மற்றும் ஹார்முஸ் நீரிணையின் நிலைமை.

தெற்கு லெபனானில் இருந்து பின்வாங்க இஸ்ரேல் மறுப்பதையும் அமெரிக்கா, லெபனான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு இணையான முத்தரப்பு கட்டமைப்பிற்கான வாஷிங்டனின் அழுத்தத்தையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கத்தை மீறும் செயல்களாக தெஹ்ரான் கருதுகிறது. மேலும், பேச்சுவார்த்தைகள் நடந்தபோதிலும், ஈரான் இன்னும் அதன் முடக்கப்பட்ட நிதியைப் பெற முடியவில்லை.

இறுதியாக, நீரிணையின் மீது தனது கட்டுப்பாட்டை நிலைநாட்ட ஈரான் உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது. அது தனது கடற்கரையில் ஒரு “பாதுகாப்பான வழித்தடத்தை” திறந்துள்ளது, அதே நேரத்தில் அமெரிக்கா ஓமனின் கடற்கரையில் ஒரு மாற்று வழித்தடத்தை ஆதரிக்கிறது.

மாற்று வழித்தடத்தை ஊக்குவிப்பதன் மூலம், போரின் போது ஹோர்முஸ் நீரிணையின் மீது தான் ஏற்படுத்திய செல்வாக்கை அமெரிக்கா பறிக்க முயல்வதாக ஈரான் அஞ்சுகிறது. ஒரு மூலோபாய நீர்வழியின் ஒரே பாதுகாவலராக ஈரான் உருவாவதை அமெரிக்கா விரும்பவில்லை.

இந்த முரண்பாடான நிலைப்பாடுகள் சிறிய மோதல்களைத் தூண்டி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் பலவீனப்படுத்துகின்றன. தனக்கு மூலோபாய ரீதியாக தோல்வி ஏற்படுவதை உணர்ந்த டிரம்ப் செய்ய முயல்வது என்னவென்றால், நீரிணை குறித்த தனது நிலைப்பாட்டை மாற்றுமாறு தெஹ்ரான் மீது பொருளாதார மற்றும் இராணுவ அழுத்தத்தை அதிகரிப்பதே ஆகும்.

அவர் தனது வான்வழித் தாக்குதலைத் தொடரலாம், ஆனால் அவரது பல ஆண்டு கால “அதிகபட்ச அழுத்தம்” மற்றும் 40 நாள் குண்டுவீச்சுகள் ஈரானின் பேச்சுவார்த்தை நிலைப்பாட்டை மாற்றுவதற்கு மிகக் குறைவாகவே உதவியுள்ளன. ஹோர்முஸ் நீரிணை விவகாரத்தில் அவர் மீண்டும் போருக்குச் சென்றால், ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த நிலைப்பாடு (இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது) மேலும் தீவிரமடையும்.

மீண்டும் போர் தொடங்கினால், அது ஒட்டுமொத்த மேற்கு ஆசிய பிராந்தியத்திற்கும் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்திற்கும் கெட்ட செய்தியாக அமையும். டிரம்ப் ஒரு மூலோபாய முட்டுச்சந்தில் உள்ளார், நிலைமையை மேலும் மோசமாக்குவதற்குப் பதிலாக, அவர் தனது வெளியேறும் பாதையான - புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உறுதியாகப் பின்பற்ற வேண்டும். அமைதி செயல்முறையின் ஒரு பெரிய தடை என்னவென்றால், அங்கு முழுமையான நம்பிக்கை இன்மை இருப்பதே ஆகும்.

ஈரானின் தலைமைக்கு எதிரான டிரம்பின் பகிரங்கமான வசவுகளும் துஷ்பிரயோகங்களும் எதார்த்தத்திற்குப் புறம்பான அச்சுறுத்தல்களும் அவரது நோக்கத்திற்கு உதவப் போவதில்லை.

அதேபோல், ஈரான் தொடர்ந்து வணிகக் கப்பல்களை இலக்கு வைத்தால், அது ஒரு பாதிக்கப்பட்ட நாடாகப் பார்க்கப்படுவதற்குப் பதிலாக ஆக்கிரமிப்பாளராகப் பார்க்கப்படும் அபாயம் உள்ளது. இரு தரப்பினரும் நம்பிக்கை குறைபாட்டை நிவர்த்தி செய்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள முட்டுக்கட்டைகளைத் தீர்த்து, இறுதித் தீர்வுக்காக நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து தீவிரமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும்.

(தி இந்து ஆசிரிய தலையங்கம், 10 ஜூலை 2026)

### திடீரென பதவி...

குறித்து இதுவரை எந்தத் தீர்மானமும் அறிவிக்கப்படவில்லை என்றும் மத்திய மாகாண ஆளுநர் சரத் அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தான் பதவி விலகல் செய்ய எடுத்த தீர்மானம் தனிப்பட்ட காரணங்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் சரத் அபயக்கோன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் கடந்த காலத்தில் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் பதவியும் தற்போது வெற்றிடமாகியுள்ளது.

அந்தப் பதவியை வகித்த மஞ்சுளா மதஹபொல அண்மையில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் இஷான் விஜேதிலக இடைக்கால செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

### வீரவன்ஸவின்...

அடிப்படையில், அதிகாரிகள் சில நாட்களுக்கு முன்பு அங்கு சென்றனர், ஆனால் அப்போது சரத் வீரவன்ஸ அங்கு இல்லை.

இருப்பினும், நேற்று அவர் கம்பஹாவில் இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அங்கு சென்று அவரைக் கைது செய்தனர்.


அதன்பின்னர் , சரத் வீரவன்ஸ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (அ)

### குமார ஜயக்கொடி...

2014ஆம் ஆண்டு இலங்கை உர நிறுவனத்தின் கொள்முதல் முகாமையாளராகப் பணியாற்றிய காலத்தில், அந்நிறுவனத்தின் களஞ்சிய வளாகத்தில் காப்பெற் இடும் பணிகளை மேற்கொள்வதை தனியார் நிறுவனமொன்றிடம் கையளித்தபோது, குறித்த நிறுவனத்துக்கு சாதகமாகச் செயல்பட்டதன் மூலம் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாகக் கூறி, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
விவாதங்களையெடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கன்னி**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**துலாம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.


**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாத படி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். உத்தியோகத்தில் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாயார் ஆதரவாக பேசுவார். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

# மாணவர்களுக்கும் தலைக்கவசம் கட்டாயம்! நடைமுறைப்படுத்த ஒரு வார கால அவகாசம்



வவுனியா, ஜூலை. 16
வவுனியாவில், மோட்டார் சைக்கிள்களில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளுக்கும் கட்டாயமாக தலைக்கவசம் அணிவிக்க வேண்டும் என வவுனியா பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு வார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மலீத் ரணதுங்க தலைமையில், வவுனியா - கண்டி வீதியில் அமைந்துள்ள வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நேற்று இந்த விசேட விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தலைக்கவசம் அணியாமல் தங்களது பிள்ளைகளை மோட்டார் சைக்கிள்களில் பாடசாலைக்கு அழைத்து வந்த பெற்றோர்கள் பொலிஸாரால் நிறுத்தப்பட்டு, அதனால் ஏற்படக்கூடிய விபத்து அபாயங்கள் மற்றும் சட்டரீதியான பொறுப்புகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், சிறுவர்களுக்கும் தலைக்கவசம் அணிவிப்பதன் அவசியம் தொடர்பான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் பெற்றோர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந்த நடைமுறையை முழுமையாக அமுல்படுத்துவதற்காக பெற்றோர்களுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

### வவுனியா முதல்வர் நீக்க விவகாரம்;

# ஆளுநரின் வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை நீடிப்பு

வவுனியா, ஜூலை. 16
வவுனியா மாநகர முதல்வரைப் பதவியிலிருந்து நீக்கி வடக்கு ஆளுநரால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை நீடித்து வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிகளின் ஆட்சேபனைப் பதில்களை இம்மாதம் 28ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியா மாநகர சபை முதல்வரின் பதவியை நீக்கி வெளியிடப்பட்ட ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு, நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதிகளான வடமாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, ஆட்சேபனைப் பதில்களை சமர்ப்பிப்பதற்கு மேலதிக கால அவகாசம் கோரி நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கைக்கு மனுதாரர் தரப்பு எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில், கடந்த ஜூலை 3ஆம் திகதி வழங்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை எதிர்த்து வாதிடவுள்ளதாகவும் அரச சட்டவாதி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

இதையடுத்து, பிரதிவாதிகளின் ஆட்சேபனைப் பதில்களை இம்மாதம் 28ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், மாநகர முதல்வரைப் பதவியிலிருந்து நீக்கும் ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை நீடித்தும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். (அ)

# பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டடம் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை. 16
கிளிநொச்சி பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்தில் கல்வி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய வகுப்பறை கட்டடத் தொகுதி நேற்று மாணவர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டது.

இந்த புதிய கட்டடத் தொகுதியை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பிரதேச மக்களும் விழாவில் திரளாக பங்கேற்று புதிய கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டதை வரவேற்றனர். (அ)

# வெளிநாட்டிலிருந்து வருவோரின் வீடுகளை இலக்குவைத்து திருட்டு!

### காரைநகரில் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை. 16
காரைநகரில் வெளிநாட்டிலிருந்து வருகை தருவோரின் வீடுகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகரிலுள்ள வீடொன்றில் 1600 கனேடிய டொலர், ஒரு சோடி காப்பு மற்றும் கடவுச்சீட்டு என்பனவும் மற்றொரு வீட்டில் 400 அமெரிக்க யூரோ மற்றும் இலங்கை மதிப்பிலான ஒரு இலட்சம் ரூபா என்பனவும் களவாடப்பட்டன.

இதுதொடர்பில் வீட்டின் உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியிருந்தனர்.

விசாரணைக்கமைய காரைநகரைச் சேர்ந்த 26 மற்றும் 27 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேநபர்களிடமிருந்து களவாடப்பட்ட பணம், நகை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீர்கொழும்பு சிறையில் மரணமான கைதிகள் 21 பேரும் சந்தேக நபர்கள்!

## அவர்கள் குற்றவாளிகள் அல்லர்

கொழும்பு, ஜூலை. 16

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட கொடூர வன்முறை மோதல்களின் போது கொல்லப்பட்ட 21 கைதிகளில் எவ்வித குற்றவாளிகளும் உள்ளடக்கப்படவில்லை எனவும், மரணமடைந்த அத்தனை பேரும் நீதிமன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மாத்திரமே எனவும் சிறைச்சாலைகள் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

இக் கொடூரக் கலவரத்தில் படுகாயமடைந்தவர்களில் பெரும்பான்மையானோரும் எவ்வித குற்றத்தீர்ப்புகளும் வழங்கப்படாத வெறும் சந்தேக நபர்கள் மாத்திரமே எனச் சுட்டிக்காட்டியுள்ள ஒரு மூத்த அதிகாரி, இத்துயரச் சம்பவத்தில் எவ்வித குற்றவாளிகளும் பலியாகாமை தமக்கே பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் இருவர் கடந்த 5ஆம் திகதியும், 17 பேர் அதற்கு அடுத்த நாளும் சிறை வளாகத்திற்குள்ளும், ஏனைய இருவர் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்ட பின்னரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் இரண்டு சிறை உத்தியோகத்தர்கள் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததை அடுத்து, இக் கலவரத்தில் பலியான ஒட்டுமொத்தச் சிறை அதிகாரிகளின் எண்ணிக்கை 10 உயர்வடைந்துள்ளது.

ஆரம்ப கட்ட ஊடக விபரங்களின்படி, சிறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் வழங்கிய குற்றவாளிகளை இலக்கு வைத்தே சந்தேகநபர்கள் இத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்பட்ட போதிலும், பலியானவர்களின் பட்டியலில் குற்றவாளிகள் எவருமே இல்லாத காரணத்தினால், இக் கலவரமானது சிறை அதிகாரிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட சந்தேக நபர்கள் குழுவினருக்கும் இடையிலேயே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுள்ளது என்பது தற்பொழுது உறுதியாகியுள்ளது.

கொல்லப்பட்ட அதிகாரிகளின் குடும்பங்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதை அடுத்து, நிரபராதிகளாகக் கருதப்படும் இக் கைதிகளின் குடும்பங்களுக்கும் தகுந்த நட்டஈடுகளை வழங்குவது குறித்து நீதி அமைச்சு தற்பொழுது அவசரமாகப் பரிசீலித்து வருகின்றது.

மறுபுறம், நீர்கொழும்பிலிருந்து வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்ட சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்த விவகாரம் குறித்து நள்ளிரவில் அவசரப் புலனாய்வுச் சோதனைகளை நடத்தச் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை உள்ளே அனுமதிக்க மறுத்த வெலிக்கடைச் சிறையின் பிரதான ஜெயிலர் மற்றும் சிறைச்சாலைகள் பதில் ஆணையாளர் நாயகம் ஆர். பிரசாத் ஹேமந்த குமார ஆகியோருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு தற்பொழுது அவசர அழைப்பாணை பிறப்பித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ)

# நீதிபதிகள் ஓய்வு வயது; இன்னும் முடிவு இல்லை!

கொழும்பு, ஜூலை. 16

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது தொடர்பான முன்மொழிவில் அரசு இது வரை எவ்வித இறுதித் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள பெருமளவிலான வழக்குகள், நீதி நிர்வாகத்தில் ஏற்படும் தாமதங்கள், நீதித்துறை அதிகாரிகளின் பற்றாக்குறை, தொழில் வல்லுநர்களின் இடப்பெயர்வு மற்றும் அதிகரித்து வரும் சராசரி ஆயுள் காலம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அமைச்சரவை கவனத்தில் கொண்டுள்ளது. இருப்பினும், இந்த விடயத்தில் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னதாக, மேலதிக அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு நீதி அமைச்சுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு தனது இறுதி நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை என்றும், இது தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு தரப்பினரிடமிருந்து இந்த முன்மொழிவு குறித்து முரண்பாடான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும், இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னதாக அவை அனைத்தும் பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நீதித்துறை அதிகாரிகளை ஆள்சேர்ப்பு செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் இன்மையால் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டார். உதாரணமாக, திட்டமிடப்பட்ட 50 நீதிவான் பதவிகளுக்கு 33 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# 11 பேருக்கு வி.ஐ.பி. பாதுகாப்பா? மறுக்கிறார் அமைச்சர் நளிந்த!

கொழும்பு, ஜூலை. 16

11 பேருக்கு விசேட வி.ஐ.பி. பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் உண்மையல்ல என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

அண்மையில் அசோக ரன்வல, முகமது ரிஸ்வி சாலி, சரத் குமார, அஜித் சாந்த, ருவன் விஜேவீர, திலங்க யு. கமகே, சுனில் பியான்வில, தினேஷ் ஹேமந்த, ரஞ்சித் மத்துமபண்டார, எச்.ஏ. தர்மசேன, கலகொடத்தே ஞானசார தேரர் உள்ளிட்டோருக்கு வி.ஐ.பி பாதுகாப்பு வழங்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்ததாக குறிப்பிட்டார்.

இது தொடர்பாக விசேட பாதுகாப்பு பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளதாகவும், அதில் குறித்த நபர்களில் எவருக்கும் முக்கியப் பிரமுகர் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நலிந்த ஜெயதிஸ்ஸ கூறினார்.

எனவே, 11 பேருக்கு வி.ஐ.பி. பாதுகாப்பு வழங்கப்பட்டதாக வெளியான தகவல்கள் ஆதாரமற்றவை என்றும், அத்தகைய பாதுகாப்பு யாருக்கும் வழங்கப்படவில்லை என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# மத்திய மாகாணத்தின் தரம் 11 தமிழ் வினாத்தாளினால் சிக்கல்

கொழும்பு, ஜூலை. 16

மத்திய மாகாண பாடசாலைகளின் 11 ஆம் தர மாணவர்களுக்காக வழங்கப்பட்ட தமிழ் மொழிப் பாடப் பரீட்சை வினாத்தாள், 2019 ஆம் ஆண்டு வடமாகாண பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட வினாத்தாளின் மறுபதிப்பா என்பது குறித்து கண்டறிய, மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

11 ஆம் தர மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை நேற்று முன் தினம் நடைபெற்ற போதே இந்த சிக்கலான நிலைமை எழுந்துள்ளது.

இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக வழங்கப்பட்ட இந்தத் தமிழ் மொழி வினாத்தாளின் 24 ஆம் வினா முதல் இறுதி வரையான அனைத்து வினாக்களும், மற்றும் இரண்டாவது மற்றும் மூன்றாவது வினாத்தாள்களில் உள்ள அனைத்துக் கேள்விகளும் 2019 ஆம் ஆண்டு வடமாகாண மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாளில் இடம்பெற்றவை என, இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், மத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியதுடன், இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வினாத்தாள் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு மாகாண பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வினவிய போது, 2019 ஆம் ஆண்டு வடமாகாண வினாத்தாளைப் பெற்றுக் கொண்டு, தற்போது வழங்கப்பட்ட வினாத்தாளுடன் ஒப்பிட்டுப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நயோமி ஹெட்டியாரச்சி தெரிவித்தார். (அ)

# ஜூலையில் இதுவரை இலங்கைக்கு 71,383 சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, ஜூலை.

2026 ஜூலை மாதத்தில் மாத்திரம் 71383 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு.

ஜனவரி முதலாம் திகதி ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 12 இலட்சத்து 17956 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் இந்தியப் பிரஜைகளே அதிகளவானோர் ஆவர், அவர்களின் எண்ணிக்கை 16,610 எனப் பதிவாகியுள்ளது.

நாட்டிற்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்தைக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி ஜூலை மோதம் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 12 இலட்சத்து 17,956 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக அந்த அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் மாத்திரம் ஒரே நாளில் பதிவான அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜூலை 11 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் மாத்திரம் 6,636 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் இந்தியப் பிரஜைகளே அதிகளவானோர் ஆவர். அவர்களின் எண்ணிக்கை 16,610 எனப் பதிவாகியுள்ளது. இதற்கு மேலதிகமாக பிரித்தானிய பிரஜைகள் 7,296 பேரும், அவுஸ்திரேலிய பிரஜைகள் 4,656 பேரும், சீன பிரஜைகள் 4,316 பேரும், நெதர்லாந்து பிரஜைகள் 3,547 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

பிரான்ஸ், ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். (அ)

# பிரசன்ன ரணதுங்கவுக்கு விதித்த வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்

கொழும்பு, ஜூலை. 16

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வரும் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக நீக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரசன்ன ரணதுங்க சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, தனிப்பட்ட தேவைக்காக வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதால் பயணத்தடையை தற்காலிகமாக நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சார்பில் முன்னிலையான அதிகாரி, நீதிமன்றம் பொருத்தமான உத்தரவை பிறப்பிக்குமாறு தெரிவித்தார்.

இதனை பரிசீலித்த நீதவான், 10 இலட்சம் ரூபாய் மேலதிக சரீரப் பிணையின் அடிப்படையில் வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக நீக்க உத்தரவிட்டதுடன், பிரசன்ன ரணதுங்கவை எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திட்டமிடல் இல்லாத நெல் கொள்வனவினால் கிழக்கு மாகாணத்தில் விவசாயிகள் பாதிப்பு

## தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 16

நாட்டில் தற்போது சிறுபோக கால நெல் அறுவடை தீவிரமடைந்து வரும் நிலையில், அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் இல்லாத நெல் கொள்முதல் கொள்கையினால் கிழக்கு மாகாண விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொள்ளும் அபாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதாக தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் தரவுகளின்படி, இம்முறை சிறுபோக கால பருவத்தில் நாடு முழுவதும் சுமார் 4,02,756 ஹெக்ரேயர் பரப்பளவில் நெற்பயிர்ச் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இதில் கிழக்கு மாகாணத்தில் மட்டும், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் 55,356 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளதுடன், அங்கு சுமார் 63,000 இற்கும் அதிகமான விவசாயிகள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும், அம்பாறை மாவட்டத்தில் உள்ள 46 நெல் களஞ்சியசாலைகளில் இதுவரை பாலம்கடுவ பகுதியில் உள்ள ஒரேயொரு களஞ்சியசாலை மாத்திரமே திறக்கப்பட்டுள்ளது. இதன் அதிகபட்ச கொள்ளளவு வெறும் 1,000 மெற்றிக் தொன் மட்டுமேயாகும்.

அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் லட்சக்கணக்கான விவசாயிகள் இருக்கும் போது, தலா 1,000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட வெறும் மூன்று களஞ்சியசாலைகளைத் திறந்துவிட்டு, 100% கொள்முதல் பணிகளை முடித்துவிட்டதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

இம்முறை ஒரு விவசாயியிடமிருந்து அதிகபட்சமாக 2,500 கிலோ கிராம் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும் என அரசாங்கம் வரம்பு விதித்துள்ளது.

இதனால், 3 முதல் 5 ஏக்கர் வரை பெரும் போகத்தில் பயிர் செய்து, பெருமளவிலான நெல் விளைச்சலைப் பெற்றுள்ள விவசாயிகள், எஞ்சிய தங்களது நெல் மூட்டைகளை எங்கு கொண்டு சென்று சேமிப்பது அல்லது யாரிடம் விற்பனை செய்வது என்று தெரியாமல் தவித்து வருகின்றனர்.

இம்முறை நெல் கொள்முதலுக்காக வெறும் 6,000 மில்லியன் ரூபா மட்டுமே அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு ஒட்டுமொத்த விளைச்சலில் மிகச் சிறிய பகுதியான 40,000 மெற்றிக் தொன்னை மட்டுமே அரசாங்கத்தால் கொள்முதல் செய்ய முடியும். அரசாங்கம் நெல்லைக் கொள்முதல் செய்யத் தவறும் பட்சத்தில், எஞ்சிய நெல்லினை தனியார் வர்த்தகர்கள் ஒரு கிலோ 75 ரூபா போன்ற மிகக் குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து சுரண்டும் அவலநிலை ஏற்படும் -என்றார். (அ)

# சமூக ஊடகங்கள் மூலம் வாகனங்கள் கொள்ளை!

## சந்தேக நபர் கைது

கொழும்பு, ஜூலை. 16

ஒழுங்கமைக்கப்பட்ட வாகனக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில், யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் ஒருவர் மேல் மாகாண வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

4 மில்லியன் ரூபாவிற்குத் தான் கொள்வனவு செய்த வேன் ஒன்றை ஆயுதமேந்திய கும்பல் ஒன்று பலவந்தமாகப் பறித்துச் சென்றதாக, ஜூலை 10 ஆம் திகதி ஒருவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

பளுமஹர, முடுங்கொட பகுதியில் உள்ள வாகன விற்பனை நிலையத்தின் உரிமையாளர் உட்பட சுமார் பத்து பேர் இந்தச் குற்றச் செயலுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் வாகனங்களை விற்பனை செய்வதற்கான விளம்பரங்களை வெளியிட்டு வந்துள்ளனர். வாகனங்களை விற்பனை செய்த பிறகு, அந்த வாகனங்களை வாங்கியவர்களைப் பின்தொடர்ந்து சென்று, மிகவும் திட்டமிட்ட முறையில் வாகனங்களைக் கொள்ளையடித்துள்ளமை பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ந்து வாகன விற்பனை நிலையத்தின் உரிமையாளர் உட்படப் பல சந்தேகநபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

நிட்டம்புவ, களகெடிஹேன பகுதியில் உள்ள வாகன விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, இரண்டு வாள்கள், இரண்டு கைத்துப்பாக்கிக் கூடுகள், மூன்று தோட்டாக்கள் மற்றும் ஜீப் வண்டி ஒன்றையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதே பாணியில் மேற்கொள்ளப்பட்ட மேலும் இரண்டு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ)

# கதிர்காமத்தில் ஆசனப்பதிவுக்கு முண்டியடிக்கும் யாத்திரீகர்கள்!

காரைதீவு, ஜூலை. 16



வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம ஆலயத்தின் கொடியேற்றம் மற்றும் ஆடிவேல் விழா திருவிழாவுக்கு சென்றவர்கள் வீடு திரும்புவதற்கு பஸ் முன் ஆசனப் பதிவிற்காக காலையில் பஸ்தரிப்பு நிலையத்தில் முண்டியடித்துக் கொண்டு நிற்பதை காணக் கூடியதாக இருந்தது.

கொடியேற்ற நிகழ்வு நேற்று மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

அதனை முன்னிட்டு பல்வேறு பகுதிகளிலும் இருந்து பக்தர்கள் பாதை யாத்திரையாக கதிர்காம ஆலயத்தினை நோக்கி வருகை தந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மீண்டும் தங்களது இருப்பிடங்களை நோக்கி செல்வதற்கான வசதிகளை இலங்கை போக்குவரத்துச் சபையினர் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில். நேற்று பிற்பகல் தொடக்கம் கிழக்கு மாகாணம் மற்றும் வட மாகான போக்குவரத்து வசதிகளை இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊடாக கதிர்காமத்தில் இருந்து மேற்கொள்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் திருகோணாமலை, வாழச்சேனை, ஏராவூர், மட்டக்களப்பு, களவாஞ்சிகுடி, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், போன்ற பகுதிகளுக்கான போக்குவரத்து சேவைகளை முன்பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# கல்முனை மாநகர வர்த்தகர்களுக்கு வியாபார விழிப்புணர்வு கருத்தரங்கு

கல்முனை, ஜூலை. 16

கல்முனை மாநகர சபை ஏற்பாடு செய்திருந்த வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, சாய்ந்தமருது பொலிவேரியன் கலாசார மண்டபத்தில் மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் நுகர்வோர் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட அலுவலக புலனாய்வு உத்தியோகத்தர் இஸட். எம். சாஜித் பிரதான வளவாளராகக் கலந்து கொண்டு, வியாபார நடவடிக்கைகளின் போது வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட விதிமுறைகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

இதன்போது வர்த்தகர்களின் கேள்விகளுக்கும் அவர் பதில்களை வழங்கி விளக்கமளித்தார்.

அத்துடன் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம். நிஸ்தார் உணவுப் பாதுகாப்பு தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார்.

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கத்தின் செயலாளர் முஹம்மட் கபீர், சந்தை வர்த்தகர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகள் தொடர்பாக கருத்துகளை முன்வைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் மனாஸிர் அஹ்சன் உள்ளிட்டோர் உரையாற்றியதுடன் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# எஸ்.பியின் சகோதரர் கைது!

கொழும்பு, ஜூலை. 16

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் சகோதரரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஜயலத் பண்டார திஸாநாயக்க, நிதி மோசடிக் குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபான உரிமம் பெற்றுத் தருவதாகக் கூறி, வீரகெட்டியவைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் 27.5 மில்லியன் ரூபாயைப் பெற்று மோசடி செய்ததாக மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு குறித்து மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிதி மற்றும் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து, நேற்று முன் தினம் ஹங்குரன்கெத்த பிரதேசத்தில் வைத்து திஸாநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

58 வயதுடைய சந்தேகநபர் நேற்று நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மில்லனிய பிரதேச சபையின் தலைவருக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, ஜூலை. 16

மில்லனிய பிரதேச சபைத் தலைவர் சமன் சுஜீவ ஜயதுங்கவிற்கு, அநாமதேய தொலைபேசி அழைப்பின் ஊடாக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், ஹொரண தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸார் தெரிவிப்பதன்படி, நேற்று அதிகாலை 1.00 மணியளவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர், தலைவரின் கொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி, அதிகாலை விடியு முன் அவரை கொலை செய்து விடுவதாக அச்சுறுத்தியுள்ளார்.

இந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து, அவர் உடனடியாக பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்திற்குத் தகவல் தெரிவித்துள்ளார். அதற்கமைய, ஹொரண தலைமையகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவினர் அவரது வீட்டிற்குச் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் அழைப்புப் பதிவுகளை ஆய்வு செய்து, இந்த அழைப்பின் பின்னணியில் உள்ள நபர் யார் என்பதைக் கண்டறியும் பொருட்டு தற்போது தொழில்நுட்ப விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதேச சபை தலைவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஹொரண தலைமையகப் பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிகாரிக்கு விடுக்கப்பட்ட மிரட்டலே சிறை வன்முறையின் ஆரம்பப் புள்ளி!

## நீதிமன்றில் அறிக்கை சமர்பித்தது சி.ஐ.டி.

கொழும்பு, ஜூலை. 16

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக மூன்று குழுக்களாக 40 குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் களமிறக்கப்பட்டுள்ளதாக, நீர்கொழும்பு நீதவான் சிலனி பெரேரா முன்னிலையில் குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் 31 பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்தனர்.

நீதவான் முன்னிலையில் விசாரணைகளின் முன்னேற்றத்தை விளக்கிய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, இதுவரை 136 சிறைச்சாலை அதிகாரிகள், 141 கைதிகள் மற்றும் 9 விசேட அதிரடிப்படை வீரர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டது.

வன்முறை இடம்பெற்ற போது சிறைச்சாலைக்குள் 2,417 கைதிகளும், 166 சிறைச்சாலை ஊழியர்களும் இருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த ஜூலை 5 ஆம் திகதி, ஏ 1 விடுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த "கட்டுவெல்லே கம சுரேஷ்" என்ற கைதி, தனக்கு நிர்ணயிக்கப்பட்ட 30 நிமிடங்களுக்கு மேலாக உடற்பயிற்சி செய்ய நேரம் வேண்டுமெனக் கோரியுள்ளார்.

அவரது கோரிக்கை மறுக்கப்பட்டதையடுத்து, அவர் சிறைச்சாலை அதிகாரி ஒருவரைத் தகாத வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தியுள்ளார். மறுநாள் காலை விடுதி திறக்கப்பட்டவுடன், அந்த கைதி ஏ 2 விடுதிக்குள் புகுந்து மற்ற கைதிகள் மீது தாக்குதல் நடத்தியதே இந்த விரிவான வன்முறைக்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்ததாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் இரு கைதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மற்றொருவர் பின்னர் காயங்கள் காரணமாக உயிரிழந்தார். மொத்தம் 36 கைதிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வன்முறை சிறைச்சாலை முழுவதும் பரவிய நிலையில், கைதிகள் சிறைச்சாலையின் மருந்தகம் மற்றும் நிர்வாகக் கட்டடங்களைச் சேதப்படுத்தியுள்ளனர். நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாததால் சிறைச்சாலை அதிகாரிகள் காவல்துறையின் உதவியை நாடியுள்ளனர்.

வன்முறை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, சிறைச்சாலை தலைமையகத்திலிருந்து 89 அவசரகால மீட்புப் படை வீரர்கள் வரவழைக்கப்பட்டனர்.

மறுநாள் (6) காலை உணவளிப்பதற்காக அதிகாரிகள் உள்ளே சென்றபோது, "நாங்கள் தாக்குவதற்குத் தயாராக இருக்கிறோம்" என கைதிகள் மிரட்டியுள்ளனர்.

முற்பகல் 10.30 முதல் 10.50 வரை நிலைமை மோசமடைந்து, கைதிகள் கற்கள், மரக்கட்டைகள் மற்றும் இரும்புத் துண்டுகளைக் கொண்டு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

உள்ளே இருந்த அதிகாரிகளுக்கு சிறைச்சாலை அமைப்பு பற்றி தெரிந்திருந்ததால் அவர்கள் தப்பித்தாலும், கொழும்பிலிருந்து சென்ற அதிகாரிகள் வழி தெரியாமல் உள்ளே சிக்கிக் கொண்டனர்.

மோதலின் போது சிறைச்சாலையின் ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு பகுதி கைதிகளின் கைகளுக்குச் சென்றுள்ளது.

ஒரு கட்டத்தில் அதிகாரிகள் மீது துப்பாக்கி நீட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கண்ணீர்ப்புகை மற்றும் வானத்தை நோக்கி எச்சரிக்கை துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டும் கைதிகள் அடங்காததால், விசேட அதிரடிப்படையினர் உள்ளே நுழைந்து சிக்கியிருந்த அதிகாரிகளை மீட்டனர்.

சிறைச்சாலைக்குள் இருந்து ஒரு எவ்-58 ரகத் துப்பாக்கி, அதன் தோட்டாக்கள் மற்றும் 271 பயன்படுத்தப்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவத்தின் போது அதிகாரிகளிடம் இருந்த 60 துப்பாக்கிகளும் தடயவியல் பரிசோதனைக்காகக் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலையில் இருந்து கைப்பற்றப்பட்ட சிசிரிவி பதிவுகள் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினி தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கொலைக் குற்றம் (தண்டனைச் சட்டக்கோவை 296), ஆயுதச் சட்ட மீறல் மற்றும் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் இந்த விசாரணைகள் தொடர்கின்றன.

கைதிகள் அனைவரும் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில், அவர்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், ஏனைய சிறைகளுக்கு மாற்றப்பட்ட கைதிகளிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் ஊடாக வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தநிலையில், வழக்கு அடுத்த கட்ட விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(அ)

### நெடுந்தீவு...

நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளில் தற்போது செயல்பாட்டிலுள்ள கலப்பு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டமைப்பு (Hybrid Renewable Energy System – HRES) திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இதன்போது கேட்டறிந்த ஜனாதிபதி, அத்தீவுகளை பசுமை வலுசக்தி தீவுகளாக அபிவிருத்தி செய்யவும், மேம்படுத்தவும் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன், ஜெய்க்கா நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இடையில் நிறுத்தப்பட்ட வலுசக்தி திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்கான 2027 வரவு-செலவுத் திட்ட நிதித் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தற்போது செயல்பாட்டிலுள்ள கொலன்னாவையிலிருந்து கொழும்பு துறைமுகம் வரையான இரண்டாவது நிலத்தடி மின் விநியோகக் பாதை, சம்பூர் - கப்பல்துறை மின் விநியோக அபிவிருத்தித் திட்டம், புதிய ஹபரணை - கப்பல்துறை மின் விநியோக அபிவிருத்தித் திட்டம், பாதுக்கை மின் விநியோக உப நிலையம் நிறுவுதல், கூரைகளில் பொருத்தப்படும் சூரிய சக்தி சேகரிப்பு மற்றும் மெய்நிகர் நிகர அளவீட்டுத் உள்ளிட்ட தற்பொழுது செயற்படுத்தப்படும் மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள பிரதான திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்தார்.

அதேபோன்று, எரிபொருள் துறையில் தற்போது செயல்பாட்டிலுள்ள முக்கிய திட்டங்களான கொலன்னாவை எண்ணெய் களஞ்சிய தொகுதியில் புதிதாக 06 எண்ணெய் தாங்கிகளை அமைத்தல், முத்துராஜவெல எரிபொருள் களஞ்சிய தொகுதியில் புதிதாக 02 எண்ணெய் தாங்கிகளை அமைத்தல் மற்றும் எரிபொருள் வசதிகளை விரிவுபடுத்தும் திட்டம், கொலன்னாவை எண்ணெய் களஞ்சிய தொகுதியில் உள்ள தாங்கிகளை புனரமைத்தல், கொலன்னாவை எண்ணெய் களஞ்சிய தொகுதியின் 07 ஆவது வலயத்தில் எரிபொருள் நிரப்பும் வசதிகளை மேம்படுத்தல், உள்ளிட்ட 14 திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நிதித் தேவைகள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, இந்த அனைத்து திட்டங்களையும் உரிய காலத்திற்குள் நிறைவு செய்து மக்களுக்கு அதன் பலன்களை பெற்றுக்கொடுப்பதன் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தினார்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் மற்றும் வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக, தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜெயந்த பெர்னாண்டோ, வலுசக்தி பிரதி அமைச்சர் அர்கம் இல்யாஸ், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகருமான துமிந்த ஹூலங்கமுவ, வலுசக்தி அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளருமான ரசல் அபொன்சு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோருடன் நிதி அமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

### சாமர சம்பத்துக்கு...

ஜூலை 2ஆம் திகதி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை ஒரு பழக்கூடையுடன் சென்று சந்தித்ததாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக மறுத்துள்ள அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ, குறித்த திகதியில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானில் இருந்தார் எனவும், திருத்தந்தை லியோ அழைப்பு விடுத்திருந்த முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் இந்த ஆதாரமற்ற கருத்துக்கள் மதக் குழுக்களிடையே தேவையற்ற குழப்பத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தக்கூடும் என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடும் நபர்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

### பல்லாயிரக்கணக்கான...

பூசைகள் நடத்தப்பட்டு, ஆலய வளாகத்திலுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற பால்குடிபாவா பள்ளிவாசலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நான்கு முக்கிய சமயத் தலைவர்களின் ஆசியுரைகளுடன், பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் 'அரோகரா' பக்தி கோஷ முழக்கங்களுக்கு மத்தியில் புனிதக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்திருந்த பெரும் திரளான பக்தர்கள் இந்த நிகழ்வில் பக்திப் பரவசத்துடன் கலந்துகொண்டனர்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், புனித பாதயாத்திரையை மேற்கொண்ட பக்தர்களில் முதலாவது குழுவினர் நேற்று அதிகாலை கதிர்காமத்தை வந்தடைந்தனர்.

கடந்த 10 ஆம் திகதி முதல் உகந்தை மற்றும் குமண தேசிய பூங்கா ஊடாக கதிர்காமம் வரையான காட்டுப் பாதை பக்தர்களின் வழிபாட்டுக்காகத் திறக்கப்பட்டிருந்தது.

ஆடிவேல் விழாவின் முதலாவது வரலாற்றுச் சிறப்புமிக்க திருவீதி உலா நேற்று இரவு நடைபெற்றது.

தொடர்ந்து 15 நாள்கள் பக்திபூர்வமாக நடைபெறவுள்ள இந்த திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வான தீர்த்தோற்சவம், எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை புனித மாணிக்க கங்கையில் நடைபெற்று, இந்த ஆண்டுக்கான ஆடிவேல் விழா நிறைவுபெறவுள்ளது. (அ)

### இரண்டு சிசுக்களின்...

தற்காலிகமாக நிறுத்தப்பட்டு நேற்று புதன்கிழமை மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மூன்றாம் கட்டத்தின் 33ஆவது நாளான நேற்று புதிதாக 2 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அவை இரண்டும் சிசுக்களுடையதாகும். அதேவேளை இரண்டு என்புக்கூட்டு குவியல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. நேற்று என்புக்கூடுகள் எவையும் அகழ்ந்து எடுக்கப்படவில்லை.

அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் 414 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 409 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

### செம்மணி குறித்து...

தேசிய நல்லிணக்கம் என்பது மிக முக்கியமானது. அதனை ஏற்படுத்துவதற்காக அனைத்து வழிகளிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அனைத்து மக்களினதும் ஜனாதிபதி ஆவார். வரலாற்றில் முதன்முறையாக இந்த ஆட்சிக்கு வடக்கிலிருந்தும் பலத்த ஆதரவும் வெற்றியும் கிடைக்கப்பெற்றது.

காணி விடுவிப்பு உட்பட பல வழிகளிலும் நல்லிணக்கத்தை எட்டுவதற்கான முயற்சிகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் வடக்கிலும், தெற்கிலும் பெற்றோர் இன்றும் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

நாங்கள் ஆட்சிக்கு வரும்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு போதிய ஆளணி வளம் இருக்கவில்லை. நாம் உடனடியாகப் புதிய ஆட்சேர்ப்புகளைச் செய்து, 60 பேரை அதில் இணைத்தோம்.

மேலும், இதற்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது தலா மூன்று பேர் கொண்ட 15 குழுக்கள் அமைக்கப்பட்டு, விசாரணைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம், நிலுவையிலுள்ள 11,000 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று, செம்மணி விவகாரத்திலும் உண்மையைக் கண்டறிவதற்குக் அரசாங்கத் தரப்பிலிருந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்-என்றார். (அ)

### தமிழ் கட்சிகள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்க் கட்சிகள் என்று சொல்லிக்கொண்டு ஒரு சிலர் கொழும்பில் கூடி இருந்தார்கள். அவர்கள் ஏன் கொழும்பில் ஒன்று கூடினார்கள்? தமிழ்ப் பிரதேசத்தில் கூட்டம் கூடவில்லை?

ஏனெனில் அவர்கள் கொழும்பை மையமாகக் கொண்டவர்கள். அவர்களது பிள்ளைகள் தென்பகுதியில் திருமணம் செய்திருப்பார்கள். அவர்கள் கொழும்பை மையமாகக் கொண்டு வாழ்பவர்கள்.

தென்பகுதியில் இருக்கின்ற, தோல்வியடைந்த ஆட்சியாளர்கள் திரும்பவும் இனவாதத்தை உருவாக்கி அதனூடாக தாம் ஆட்சியை மீளக் கட்டியெழுப்பலாம் என்று நினைக்கிறார்கள். அதற்கு தமிழ்ப் பிரதிநிதிகள் எனச் சொல்பவர்கள் தரகு வேலை பார்க்கின்றார்கள்.

ஆனால் மக்கள் தெளிவான சிந்தனையில் இருக்கிறார்கள். தமிழ்ப் பிரதிநிதிகள் எனச் சொல்பவர்களால் வடக்கு மாகாணத்தில் அல்லது தமிழ்ப் பிரதேசத்தில் அந்தக் கூட்டத்தைக் கூட்டத் தெரியாதவர்கள் கொழும்பில் ஹோட்டல்களில் கூடியமை ஒரு வெட்கக்கேடான விடயம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மன்னாரில் தொல்லியல் இடங்களை பாதுகாக்க விசேட வேலைத்திட்டம்!

### அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

மன்னார், ஜூலை. 16

மன்னார் மாவட்டத்தில் உள்ள தொல்லியல் இடங்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.


வவுனியா பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செனரத் விக்கிரமசிங்க பங்கேற்றார்.

அத்துடன், வவுனியா பிராந்திய தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றனர்.

136 ஆவது தேசிய தொல்லியல் தினம் தொடர்பான நினைவூட்டல்கள் இடம்பெற்றதுடன், மன்னார் மாவட்டத்தில் உள்ள தொல்லியல் இடங்களை பாதுகாப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

“மர புரிமைக்கு ஓர் உயிரோட்டம்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற கலந்துரையாடலில், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள்,பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் பங்கேற்றனர். (அ)

# வீதி அபிவிருத்திப் பணிகள் வவுனியாவில் நேற்று ஆரம்பம்



வவுனியா, ஜூலை. 16

வவுனியா - போகஸ்வெவ பி-442 வீதியின் அபிவிருத்திப் பணிகள் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில், வெளிக்குளம் சந்தியிலிருந்து மாமடு வரை அமைந்துள்ள 8 கிலோமீற்றர் தூர வீதியை காப்பெற் அமைத்து அபிவிருத்தி செய்யும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியாவிலிருந்து போகஸ்வெவ வரை சுமார் 48 கிலோமீற்றர் நீளமுடைய இந்த வீதி, நீண்ட காலமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

இந்த நிலையில் முதற் கட்டமாக 8 கிலோமீற்றர் தூரம் 529 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன், இந்தப் பணிகள் 18 மாதங்களுக்குள் நிறைவடையுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் கட்டத்தில் மாமடுவவிலிருந்து ரம்பவெட்டிய வரையும், மூன்றாம் கட்டத்தில் ரம்பவெட்டியிலிருந்து போகஸ்வெவ வரையும் வீதி அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டம் நிறைவடைந்த பின்னர், 18 கிராமங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான மற்றும் விரைவான போக்குவரத்து வசதியைப் பெறவுள்ளனர்.

ஆரம்ப நிகழ்வில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், உள்ளூராட்சி பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# யாழில் தனியார் காணிகளைக் கையகப்படுத்த போலி ஆவணங்களுடன் சுற்றும் மோசடி கும்பல்!

### மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை. 16

யாழ்ப்பாணத்தில் போலி ஆவணங்களுடன், தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தும் கும்பல் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் திருநெல்வேலிப் பகுதியில் பலாலி வீதியை அண்மித்த வெற்றுக்காணி ஒன்றைக் கையகப்படுத்தும் நோக்குடன் அவற்றுக்கு எல்லைத் தூண்களை நடும் வேலையில் கும்பல் ஒன்று ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பில் அறிந்த காணி உரிமையாளர் அவ்விடத்துக்குச் சென்று, தனது காணிக்கு தூண்களை நடுவது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு குறித்த கும்பல் காணி தம்முடையது எனவும், உமது காணி என்றால் , அதற்கான உறுதி ஆவணங்களைக் கொண்டு வந்து உறுதிப்படுத்துமாறும் மிரட்டும் தொனியில் கூறியுள்ளது.

உங்கள் காணி என்றால் அதற்கான ஆவணங்களை காட்டுங்கள் எனக் காணி உரிமையாளர் கேட்ட போது, அவற்றை காட்ட வேண்டிய அவசியம் இல்லை என மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பில் காணி உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த நிலையில், குறித்த கும்பல் காணியில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளது.

அதேவேளை, குறித்த கும்பல் சில தினங்களுக்கு முன்னரும் திருநெல்வேலிப் பகுதியில் வேறொரு வெற்றுக்காணிக்குத் தூண்களை இடும் பணிகளில் ஈடுபட்டவேளை காணி உரிமையாளர் சென்று கேட்ட போது அவரை மிரட்டியுள்ளது. அவர் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள முயன்றவேளை காணியில் இருந்து வெளியேறி சென்றுள்ளது.

குறித்த கும்பல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், வெற்றுக்காணிகளை இலக்கு வைத்து செயற்படும் கும்பல் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 81ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை. 16

நல்லூர் சங்கிலியன் மன்ற சன சமூக நிலையத்தின் 81ஆவது ஆண்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மன்றத்தின் சங்கிலியன் அரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி வி.மதிவதனி, சங்கிலியன் மன்ற மூத்த உறுப்பினர் அ.மனோகரன், மன்றக் காப்பாளர்களான இ.ச.பே.நாகரட்ணம், மருத்துவர் வை.தியாகராசா, பிரபல நாதஸ்வர கலைஞர் பி.ரஜீவன் மற்றும் யாழ். சி.டி.பி. வங்கி முகாமையாளர் திருமதி சுறமியா சுதர்சன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் 2025ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ)

# யாழ்.ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை. 16

இலங்கையின் முதலாவது கத்தோலிக்க தமிழ் ஆயரும் யாழ்.மறை மாவட்ட சுதேச ஆயருமான பேரருட்திரு ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை (அ.ம.தி) ஆண்டகையின் 54 ஆவது மறைவு தினம் நாளை வெள்ளிக்கிழமையும் 125 ஆவது பிறந்த தினம் ஜூலை 20 திங்கட்கிழமையும் நினைவுகூரப்படுகிறது.

யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் மறைவு தினமான நாளை காலை இரங்கல் திருப்பலியும், பேராலய முன்றலில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. ஏனைய பங்குகளிலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளை 1929 ஜூலை 5 ஆம் திகதி றோமில் குருப்பட்டம் பெற்று நாடு திரும்பி யாழ்.மறை மாவட்டத்தில் குருத்துவப்பணியை முன்னெடுத்தார். ஆயர் இல்ல செயலர், கத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளர், குரு முதல்வர், கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் போன்ற பதவிகளை வகித்தார். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபராக நியமனமாகி மூன்று மாதங்களில் இணை ஆயராக வத்திக்கானால் நியமிக்கப்பட்டு 1949 மே 29 யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1950 ஜூலை 20 பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவரான யாழ். ஆயர் பேருட்திரு ஜோண் கியமோர் (அ.ம.தி) ஓய்வு பெற்றதை தொடர்ந்து ஆயர் பதவியை பொறுப்பேற்று யாழ் மறை மாவட்டத்தை 22 ஆண்டுகள் சிறப்பாக பரிபாலித்தார்.1972 ஜூலை 17 இல் 71 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்று மன்னார் மறை மாவட்டமும் யாழ்.மறை மாவட்டமும் இணைந்திருந்தன. (அ-02)

# யாழில் இருந்து மண்ணித்தலைக்கு மரபுரிமை பயணம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை. 16

வரலாற்றுப் பழமை வாய்ந்த சோழர் காலத்து ஆலயமான பூநகரி மண்ணித்தலை சிவன் ஆலயம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள தொன்மை வாய்ந்த சிவத்தலங்களை தரிசிப்பதற்கான “மரபுரிமைப் பயணம்” இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டை முனீஸ்வரன் ஆலய முன்றலில் இருந்து, இன்று வியாழக்கிழமை காலை 07.30 மணியளவில் பயணம் ஆரம்பமாகி, துணைவி பிரகேஸ்வரன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், சாவகச்சேரி வாரிவரனேஸ்வரம் மற்றும் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் ஆகியவற்றுக்கு சென்று இறுதியாக பூநகரி மண்ணித்தலை சிவாலயம் சென்றடையவுள்ளது.

குறித்த பயணத்தில் இணைபவர்களுக்கு, போக்குவரத்து வசதிகள் , உணவு உபசாரங்கள் வழங்கப்படவுள்ளன. இப்புனித சிவ தரிசனப் பயணத்தினை தொல்லியல் திணைக்களம், வட மாகாண சுற்றுலா பணியகம் மற்றும் இராஜ இராஜேந்திர சுவாமிகள் ஆகியோர் இணைந்து மிகச் ஒழுங்கமைத்துள்ளனர்.

சோழர் காலத்து ஆன்மீகப் பெருமையையும், நமது பாரம்பரிய மரபுரிமைகளையும் போற்றிப் பாதுகாக்கும் இந்த வரலாற்றுப் பயணத்தில் ஆன் மீகப் பற்றாளர்களையும், பொதுமக்கள் அனை வரையும் அன்போடு கலந்து சிறப்பிக்குமாறு ஏற் பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# கதிர்காமக் கந்தன் கொடியேற்றமன்று வேல் அனுப்பும் பூசை செல்வசந்நிதியில்



யாழ்ப்பாணம், ஜூலை. 16

வடமராட்சி தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து பாரம்பரியமாக கதிர்காம கந்தன் கொடியேற்ற நாளில் வேல் அனுப்புகின்ற சிறப்பு பூசைகள் நேற்று செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் சிறப்பர்க இடம் பெற்றன. பாரம்பரியமாக இடம்பெறும் குறித்த வேல் அனுப்பும் நிகழ்வு நேற்று மாலை 5:55 மணியளவில் ஆரம்பமாகி சிறப்பு பூசைகள் இடம்பெற்று சரியாக இரவு 7:00 மணியளவில் வேல் அனுப்பும் சாம்பிர்தாய நிகழ்வு இடம்பெற்றது.

இதில் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மேல் அனுப்ப அரிய காட்சியை கண்டு களித்ததோடு சிறப்பு பூசைகளிலும் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (அ-02)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org